# TNPSC குரூப் – 4
# பொது தமிழ் – மாதிரி வினா விடை

www. arivukadal.com
Cell No : 98651 30130

1. பொருத்தப்பட்டவைகளில் எது சரி?

1. பெயர்ப் பகாப்பதம் - மரம், நாய், நீர்
2. வினைப் பகாப்பதம் - உண், காண், எடு
3. இடைப் பகாப்பதம் - தில், மன், பிற
4. உரிப் பகாப்பதம் - சால, நனி, கடி, உறு

(a). 1,3,4 (b). 3,4
(c). அனைத்தும் சரி (d). அனைத்தும் தவறு

2. 'பெருநாவலராக' அழைக்கப்படுபவர் யார்?

(a). நல்லாதனார் (b). பாரதியார்
(c). திருவள்ளுவர் (d). பாரதிதாசன்

3. பொருத்துக.

(a). குந்தம் 1. சூலம் (b). கந்துகம் 2. பந்து
(c). சடிலம் 3. சடை (d). வளவு 4. வீடு

| | (a) | (b) | (c). | (d). |
|---|---|---|---|---|
| (a). | 2 | 1 | 4 | 3 |
| (b). | 1 | 3 | 2 | 4 |
| (c). | 4 | 2 | 3 | 1 |
| (d). | 1 | 2 | 3 | 4 |

4. பொருத்தப்பட்டவைகளில் எது சரி?

1. பொருட்பெயர்ப் பகுபதம் - சென்னையான்
2. இடப்பெயர்ப் பகுபதம் - மூக்கன்
3. காலப்பெயர்ப் பகுபதம் - பொன்னன்
4. சினைப்பெயர்ப் பகுபதம் - சித்திரையான்

(a). 1,3,4 (b). 3,4
(c). அனைத்தும் சரி (d). அனைத்தும் தவறு

5. கீழே கண்டுள்ளவற்றுள் எது/எவை சரி?

1. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி எனத் தமிழினத்தின் தொன்மையைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும்.
2. ஔவையார், திரைகடலோடியும் திரவியம் தேடு என்றார்.
3. சாத்துவன் வணிகம் செய்யும் பொருட்டுக் கடல்கடந்து சென்ற குறிப்பு மணிமேகலையில் உள்ளது.

(a). 1,2, (b). 2,3 (c). 1,3 (d). அனைத்தும் சரி

6. கீழே கண்டுள்ளவற்றுள் எது/எவை சரி?

1. பசிப்பிணி என்னும் பாவி - மணிமேகலைக் காப்பியம்.
2. மீதூண் விரும்பேல் - ஔவைபிராட்டி
3. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே - புறநானூறு , மணிமேகலை

(a). 1,2, (b). 2,3 (c). 1,3 (d). அனைத்தும் சரி

7. பொருந்தாச் சொல்

(a). சிங்கவல்லி (b). கையாந்தகரை,
(c). பிருங்ராசம், (d). தேகராசம்.

8. பொருத்தப்பட்டவைகளில் எது சரி?

1. இயல்புப் புணர்ச்சி - கற்கோட்டை
2. தோன்றல் விகாரம் - மரவேல்
3. கெடுதல் விகாரம் - வாழைப்பழம்
4. திரிதல் விகாரம் - பொன்வளையல்

(a). 1,3,4 (b). 3,4
(c). அனைத்தும் சரி (d). அனைத்தும் தவறு

9. சந்திப்பிழை இல்லாத தொடர். எது சரி?

1. அந்த பையனை நன்றாக படிக்க செய்ய வேண்டும்.
2. வந்த பையன் சொன்னச் செய்திகளை பொறுமையாக கேட்க வேண்டும்.
3. நேற்று நடந்த சிறப்பான நிகழ்வுகளை கண்டுப் பலரும் வியந்தனர்.
4. கபிலப்பரணர் தமிழ் புலவர்.

(a). 1,3,4 (b). 2,3,4
(c). அனைத்தும் சரி (d). அனைத்தும் தவறு

10. பாவலரேறு பெருஞ்சித்திரனார். எது சரி?

1. பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் துரை.மாணிக்கம்.
2. கனிச்சாறு, ஐயை, கொய்யாக்கனி, பாவியக்கொத்து, பள்ளிப்பறவைகள், நூறாசிரியம் முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார்.
3. இவர் பாவேந்தர் பாரதிதாசனின் தலைமை மாணாக்கர்.
4. தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலையம் ஆகிய இதழ்கள் மூலம் தமிழுணர்வை உருவாக்க இவர் பாடுபட்டார். அணியில்லாத கவிதை பணியில்லாத வனிதை என்பர்.

(a). 1,3,4 (b). 2,3,4
(c). அனைத்தும் சரி (d). அனைத்தும் தவறு

11. கீழே கண்டுள்ளவற்றுள் எது/எவை சரி?

1. நான், யான் என்பவை தன்மை ஒருமைப் பெயர்கள்.
2. நாம், யாம் என்பவை தன்மைப் பன்மைப் பெயர்கள்.
3. நீர், நீங்கள் ஆகியன முன்னிலைப் பன்மைப் பெயர்கள்.

(a). 1,2, (b). 2,3 (c). 1,3 (d). அனைத்தும் சரி

12. கீழே கண்டுள்ளவற்றுள் எது/எவை சரி?

1. வினையாலணையும் பெயர் வேற்றுமை உருபுகளை ஏற்று வரும்.
2. 'நீ' எனும் முன்னிலைப்பெயர் உருபேற்கும் போது உன் எனத் திரியும்
3. கெடும் - செய்யும் என்னும் வாய்ப்பாட்டு வினைமுற்று,
4. 'வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே',

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.
Cell No : 98651 30130

www.arivukadal.com

'இணையிலை முப்பாலுக்கு இந்நிலத்தே' - பாவேந்தர் பாரதிதாசன்.

(a). 1,3, (b). 2 ,4
(c). அனைத்தும் சரி (d). அனைத்தும் தவறு

13. கீழே கண்டுள்ளவற்றுள் எது/எவை சரி?

1. மாணிக்கவாசகர் அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமை அமைச்சராகப் பணியாற்றியவர்,

2. திருப்பெருந்துறையில் இறைவன் திருவருளால் ஆட்கொள்ளப் பெற்றவர்.

3. மாணிக்கவாசகரை, 'அழுது அடியடைந்த அன்பர்' என்பர்.

4. கைதான் நெகிழ விடேன். இதில், 'நெகிழ' என்பது 'தளர' என்னும் பொருளில் வந்துள்ளது.

(a). 1,3, (b). 2 ,4
(c). அனைத்தும் சரி (d). அனைத்தும் தவறு

14. பொருத்தப்பட்டவைகளில் எது சரி?

1. விடேன் - தன்மை ஒருமை வினைமுற்று.

2. கூகை - கோட்டான் 3.பொருதகர் - ஆட்டுக்கடா

4. கொளல் - அல் ஈற்றுத் தொழிற்பெயர்.

(a). 1,3, (b). 2 ,4
(c). அனைத்தும் சரி (d). அனைத்தும் தவறு

15. கீழே கண்டுள்ளவற்றுள் எது/எவை சரி?

1. மலையத்துவசன் மகன் ஞானப்பிரகாசம் 1812-இல் திருக்குறளை முதன்முதலில் பதிப்பித்துத் தஞ்சையில் வெளியிட்டார்.

2. மனவலிமையுடையோர் என்னும் பொருள் தரும் சொல் உரவோர்

3. ஏலாதியை இயற்றியவர் கணிமேதாவியார். இவர், திணைமாலை நூற்றைம்பது என்னும் நூலையும் இயற்றியுள்ளார்.

4. பரிதிமாற்கலைஞர், தாம் இயற்றிய தனிப்பாசுரத்தொகை என்னும் நூலில் பெற்றோர் இட்ட சூரியநாராயண சாஸ்திரி என்ற வடமொழிப்பெயரை மாற்றிப் பரிதிமாற்கலைஞர் எனத் தனித்தமிழ்ப்பெயரைச் சூட்டிக்கொண்டார். இந்நூலினை, ஜி.யு.போப் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

(a). 1,3, (b). 2, 4
(c). அனைத்தும் சரி (d). அனைத்தும் தவறு

16. கீழே கண்டுள்ளவற்றுள் எது/எவை சரி?

1. 1901 - மதுரைத் தமிழ்ச்சங்க இதழான செந்தமிழில் பரிதிமாற்கலைஞரின் உயர்தனிச் செம்மொழி என்னும் கட்டுரை வெளியிடப்பட்டது.

2. 1918 - மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபை, தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டித் தீர்மானம் நிறைவேற்றி, அதை இந்திய அரசுக்கும் இந்திய பல்கலைக்கழகங்களுக்கும் அனுப்பி வற்புறுத்தியது.

3. 1918 - சைவ சித்தாந்த மாநாட்டில் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

4. 1919 - கரந்தைத் தமிழ்ச்சங்கம் தமிழைச் செம்மொழியாக அறிவிக்க வேண்டுமெனத் தீர்மானம் நிறைவேற்றியது.

(a). 1,3, (b). 2 ,4
(c). அனைத்தும் சரி (d). அனைத்தும் தவறு

17. கீழே கண்டுள்ளவற்றுள் எது/எவை சரி?

1. 'வீறுடை செம்மொழி தமிழ்மொழி உலகம் வேரூன்றிய

Cell No : 98651 30130

நாள்முதல் உயிர்மொழி' - பாவலரேறு பெருஞ்சித்திரனார்.

2. 'திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி தமிழ்ச் செம்மொழியாம்' - பரிதிமாற்கலைஞர்

3. 'தொன்மை, முன்மை, நுண்மை, திண்மை, எண்மை, ஒண்மை, இனிமை, தனிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, மும்மை, செம்மை, இயன்மை, வியன்மை என வரும் பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி, அதுவே நம்மொழி'- பாவாணர்.

(a). 1,3, (b). 2,4
(c). அனைத்தும் சரி (d). அனைத்தும் தவறு

18. பொருத்தப்பட்டவைகளில் எது சரி?

1. Classical Language - உயர்தனிச்செம்மொழி
2. Green Rooms - பாசறை
3. Instinct - உள்ளுணர்வு
4. Order of Nature - இயற்கை ஒழுங்கு

(a). 1,3,4 (b). 2,3,4
(c). அனைத்தும் சரி (d). அனைத்தும் தவறு

19. பொருத்தப்பட்டவைகளில் எது சரி?

1. தமிழ் + பாடம் = தமிழ்ப் பாடம் - தோன்றல் புணர்ச்சி
2. கல் + சிலை = கற்சிலை - திரிதல் புணர்ச்சி
3. மரம் + வேர் = மரவேர் - கெடுதல் புணர்ச்சி

(a). 1,3, (b). 2,3
(c). அனைத்தும் சரி (d). அனைத்தும் தவறு

20. பொருத்தப்பட்டவைகளில் எது சரி?

1. ஐகாரக்குறுக்கம் - முஃடீது
2. ஔகாரக்குறுக்கம் - தலைவன்
3. ஆய்தக்குறுக்கம் - போன்ம்
4. மகரக்குறுக்கம் - வெளவால்

(a). 1,3, (b). 2,3
(c). அனைத்தும் சரி (d). அனைத்தும் தவறு

21. பொருத்தப்பட்டவைகளில் எது சரி?

1. கார்மேகம் கடுமையாக உழைத்தார், அதனால் வாழ்வில் உயர்ந்தார்.- கலவைத்தொடர்

2. மா, பலா, வாழை ஆகியன முக்கனிகள். - தனிநிலைத்தொடர்

3. பார்த்துப் போ, கவனமாகப் படி - கட்டளைத்தொடர்

4. பரிதிமாற் கலைஞர் மதுரைக்கருகில் உள்ள விளாச்சேரியில் பிறந்தார். - செய்தித்தொடர்

(a). 1,3,4 (b). 2,3,4
(c). அனைத்தும் சரி (d). அனைத்தும் தவறு

22. வாரியார், 'குழந்தாய்! நாள்தோறும் திருவாசகம் படிக்க வேண்டும்' என்றார்

(a). நேர்கூற்றுத்தொடர் (b). அயற்கூற்றுத்தொடர்
(c). உடன்பாடு (d). உணர்ச்சித்தொடர்.

23. பொருத்தப்பட்டவைகளில் எது சரி?

1. மனங்குரங்கு - உருவகம், 2. நாடுநகர் - உம்மைத்தொகை,
3. செம்பொன் - உவமைத்தொகை,
4. மாடும் ஆடும் - எண்ணும்மை.

(a). 1, 2, 4 (b). 2, 3, 4

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.
Cell No : 98651 30130

(c). அனைத்தும் சரி (d). அனைத்தும் தவறு

24. சந்திப்பிழையற்ற தொடர் எது?

(a). கயிறுகட்டிலில் தன்மை மறந்து உறங்கினான்.
(b). கயிற்றுக்கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.
(c). கயிற்று கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.
(d). கயிற்றுக் கட்டிலில் தன்மை மறந்து உறங்கினான்.

25. ஒருமை பன்மைப் பிழையற்ற தொடர் எது?

(a). அவன் கவிஞன் அல்ல. (b). அவன் கவிஞன் அன்று.
(c). அவன் கவிஞன் அல்லன். (d). எதுவுமில்லை

26. வழூஉச் சொல்லற்ற தொடர் எது?

(a). வலதுபக்கம் சுவறில் எழுதாதே.
(b). வலதுப்பக்கச் சுவரில் எழுதாதே
(c). வலப்பக்கச் சுவற்றில் எழுதாதே. (d). எதுவுமில்லை

27. தொடர்கள் -பொருத்தப்பட்டவைகளில் எது சரி?

1. பிசிராந்தையார், நட்புக்கு இலக்கணமாகத் திகழ்கிறார். - செய்தி.
2. குழந்தையை அடித்தது யார்? -வினா.
3. நம்நாட்டுக்கொடி தலைமையாசிரியரால் ஏற்றப்பட்டது.- செயப்பாட்டுவினை.
4. வயலில் ஆடுகள் மேய்ந்தில. - எதிர்மறை.

(a). 1,2,4 (b). 2,3,4
(c). அனைத்தும் சரி (d). அனைத்தும் தவறு

28. பொருத்தப்பட்டவைகளில் எது சரி?

1. தடக்கை - நீண்ட கைகள்
2. சூருடை கானகம் - அச்சம் தரும் காடு,
3. தழீஇய - சொல்லிசை அளபெடை
4. தேனும் மீனும் - எண்ணும்மை

(a). 1,2,4 (b). 2,3,4
(c). அனைத்தும் சரி
(d). அனைத்தும் தவறு

29. சந்திப்பிழை நீக்கிய தொடர்கள்

1. அனைத்து துறைகளிலும் ஆண்களைபோலவே பெண்களுக்கும் அரசு பணி கொடுக்க வேண்டும்.
2. ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கை பயணமாம்.

(a). 1 (b). 2 (c). 1-2 (d). எதுவுமில்லை

30. ஒருமை பன்மைப் பிழை நீக்கிய தொடர்/கள்.

1. கல்வி நலம் பெற்ற பெண்பாற்புலவர்க்கு மன்னரும் பணிந்தான்.
2. பெண்கள் பெறவேண்டியது பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.

(a). 1 (b). 2 (c). 1-2 (d). எதுவுமில்லை

31. பொருத்தப்பட்டவைகளில் எது சரி?

1. நெடுநாவாய் - பண்புத்தொகை,
2. தாமரை நயனம் - உவமைத்தொகை.
3. நனிகடிது - உரிச்சொற்றொடர்
4. அருவிலை, நன்கலம் - எண்ணும்மைகள்

(a). 1,2,3 (b). 2 ,4
(c). அனைத்தும் சரி (d). அனைத்தும் தவறு

32. தொடர்கள் - எது சரி?

1. திருநாவுக்கரசு, 'ஒன்றுகொலாம்' என்னும் திருப்பதிகம்பாடி, இறந்த பிள்ளையை எழுப்பித் திருவமுது செய்தருளினார்.
2. முதல் மாந்தன் தோன்றிய இலெமுரியாவை மனித நாகரிகத் தொட்டில் என்பர்.
3. 'பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள'-சிலப்பதிகாரம்
4.'பண்ணொடு தமிழொப்பாய்' - தேவாரம்.

(a). 1,2,3 (b). 2,4 (c). அனைத்தும் சரி (d). 1,3,4

33. தொடர்கள் - எது சரி?

1. வியங்கோள் வினைமுற்றை அடுத்து வரும் வல்லினம் மிகாது.
2. விளித்தொடரை அடுத்துவரும் வல்லினம் மிகாது.
3. இரட்டைக்கிளவியில் வல்லினம் மிகாது.
4. அவை, இவை என்னும் சுட்டுச்சொற்கள், எவை என்னும் வினாச்சொல் ஆகியவற்றை அடுத்துவரும் வல்லினம் மிகாது.

(a). 1,2,3 (b). 2,4 (c). அனைத்தும் சரி (d). 1,3,4

34. பொருத்தப்பட்டவைகளில் எது சரி?

1. வந்த + கயல்விழி = வந்த கயல்விழி
2. தைத்த + சட்டை = தைத்த சட்டை
3. வந்து + தந்தான் = வந்து தந்தான்
4. செய்து + பார்த்தான் = செய்து பார்த்தான்

(a). 1,2,3 (b). 2, (c). அனைத்தும் சரி (d). 1,3,4

35. பொருத்தப்பட்டவைகளில் எது சரி?

1. உறாஅமை - செய்யுளிசை அளபெடை
2. தக்கார், செற்றார் - வினையாலணையும் பெயர்கள்.
3. விதிர்ப்புற்றஞ்சி - விதிர்ப்பு + உற்று + அஞ்சி
4. மல்லலம் குருத்து - உரிச்சொற்றொடர்

(a). 1,2,3 (b). 2 ,4 (c). அனைத்தும் சரி (d). 1,3,4

36. பொருத்தப்பட்டவைகளில் எது சரி?

1. Trolly - நகர்த்தும் வண்டி
2. Microphone - நுண்ணொலிபெருக்கி
3. Projector - படவீழ்த்தி
4. Motion Pictures - இயங்குருப்படங்கள்

(a). 1,2,3 (b). 2 ,4 (c). அனைத்தும் சரி (d). 1,3,4

37. பொருத்தப்பட்டவைகளில் எது சரி?

1. உம்பரார்பதி - இந்திரன்.
2. தென்னவன் - சொக்கநாதன் (அ) சுந்தரபாண்டியன்
3. அய்ந்த நாவலன் - நக்கீரன்,
4. காய்ந்த நாவலன் - இறைவன்

(a). 1,2,3 (b). 2,4 (c). அனைத்தும் சரி (d). 1,3,4

38. பொருத்தப்பட்டவைகளில் எது சரி?

1. சான்றவர் - வினையாலணையும் பெயர்,
2. இருநிலை - உரிச்சொற்றொடர்,
3. மன், ஓ - அசைச்சொற்கள்.
4. கண்ணோட்டம் - தொழிற்பெயர்.

(a). 1,2,3 (b). 2,4 (c). அனைத்தும் சரி (d). 1,3,4

39. பொருத்தப்பட்டவைகளில் எது சரி?

1. என்ப - பலர்பால் வினைமுற்று

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.
Cell No : 98651 30130

2. மேற்கொள்பவர் - வினையாலணையும்பெயர்.
3. உள்ளதூஉம் - இன்னிசையளபெடை
4. அன்று - குறிப்பு வினைமுற்று.

(a). 1,3,4 (b). 2,3,4
(c). அனைத்தும் சரி (d). அனைத்தும் தவறு

40. பொருத்தப்பட்டவைகளில் எது சரி?

1. இயல்பிராறு - இயல்பு + இரண்டு + ஆறு
2. பெரும்பேறு - வீடுபேறு,
3. கோடு - கொம்பு.
4. ஆழ்நரகு - வினைத்தொகை,
5. தொக்க விலங்கு - விலங்குத்தொகுதி.
6. குறளை - புறம்பேசுதல்.

(a). 1,3,4,5 (b). 2,3,4,6
(c). அனைத்தும் சரி (d). அனைத்தும் தவறு

41. பொருத்தப்பட்டவைகளில் எது சரி?

1. ஆய்தொடி நல்லாய - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை,
2. காமத்தீ, கைமலர், பதமலர் - உருவகம்,
3. நாத்தொலைவில்லை - நா + தொலைவு + இல்லை,
4. பல்லுயிர், நல்வினை, தீவினை, பேரின்பம், கடுஞ்சொல் - பண்புத்தொகை.
5. பிணிநோயுற்றோர் - பிணி + நோய் + உற்றோர்.

(a). 1,2,3,5 (b). 2 ,4,5 (c). அனைத்தும் சரி (d). 1,3,4

42. பிரித்து எழுதுக- கமலக்கண்ணன்

(a). கமலம் + கண்ணன் (b). கமல்+ கண்ணன்
(c). கம + லக்கண்ணன் (d). கமலக் +கண்ணன்

43. பிரித்து எழுதுக- பேரண்டங்கள்

(a). பேர் + அண்டங்கள்
(b). பெரிய + அண்டங்கள்
(c). பெருமை + அண்டங்கள்
(d). பேறு+ அண்டங்கள்

44. பிரித்து எழுதுக- தானஞ்செய்வார்

(a). தானஞ் + செய்வார் (b). தானம் + செய்வார்
(c). தானம்+ செய்வார் (d). தான் + செய்வார்

45. பிரித்து எழுதுக- ஒன்றுண்டு

(a). ஒன்று +உண்டு (b). ஒறு +உண்டு
(c). ஒன் + உண்டு (d). ஒ + உண்டு

46. எதிர்ச்சொல் தருக - 'சோலை'

(a). மாலை (b). பாலை
(c). சேலை (d). காலை

47. எதிர்ச்சொல் தருக - 'தூக்கி'

(a). தாக்கி (b). பாக்கி
(c). போக்கி (d). தாழ்த்தி

48. எதிர்ச்சொல் தருக - 'வன்மை'

(a). நன்மை (b). மேன்மை
(c). மென்மை (d).தீமை

49. எதிர்ச்சொல் தருக - 'வாழ்வு'

(a). சாதல் (b). தாழ்வு
(c). உயர்வு (d). இறங்கு

50. எதிர்ச்சொல் தருக - 'பெருக்குக'

(a). வளர்த்தல் (b). கழித்தல்
(c). சுருக்குக (d). பெருகுதல்

51. செயப்பாட்டு வினை வாக்கியத்தை கண்டறிக.

(a). மக்கள் மழைநீரைச் சேமித்தனர்
(b). மழைநீரைச் சேமித்தனர் மக்கள்
(c). மழைநீர் மக்களால் சேமிக்கப்பட்டது
(d). சேமித்தனர் மக்கள் மழைநீரை

52. செய்வினைத் தொடரைக் கண்டறிக.

(a). கண்ணகி மதுரையை எரித்தாள்
(b). எரித்தாள் கண்ணகி மதுரையை
(c). கண்ணகியால் மதுரை எரிக்கப்பட்டது
(d). கண்ணகி மதுரையை எரிப்பாள்.

53. தன்வினைச் சொற்றொடரைக் கண்டறிக.

(a). உழவன் வயலை உழுதார்
(b). உழவன் வயலை உழுவித்தார்
(c). உழவன் வயலை உழார்
(d). உழவன் வயலை உழுவார்

54. பொருத்தப்பட்டவைகளில் எது சரி?

1. குரிசில் - தலைவன் 2. நயனம் - கண்கள்
3. இந்து - நிலவு 4. நுதல் - நெற்றி.

(a). 1,3, (b). 2 ,4
(c). அனைத்தும் சரி (d). அனைத்தும் தவறு

55. பிறவினைச் சொல்லைக் கண்டறிக.

(a). தலைவர் மாநாட்டைக் கூட்டினார்
(b). தலைவர் மாநாட்டைக் கூட்டுவித்தார்
(c). மாநாடு தலைவரால் கூட்டப்பட்டது
(d). தலைவர் மாநாடு கூட்டினார்.

56. 'கோ' - என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது?

(a). அரசன் (b). அரசி
(c). அமைச்சன் (d). புலவன்

57. 'வே' - என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது?

(a). கட்டுதல் (b). ஒற்று
c). மண் (d). இடை

58. 'தீ' - என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது?

(a). தீர்வு (b). தீய்தல்
(c). சுடுதல் (d). நெருப்பு

59. 'பாரதியார் குயில்பாட்டை பாடினார்' - எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.

(a). செயப்பாட்டு வினை வாக்கியம்
(b). கட்டளை வாக்கியம்
(c). செய்வினை வாக்கியம்
(d). பிறவினை வாக்கியம்

60. அகரவரிசைப்படி சொற்களை சீர்செய்க.

(a). ஊடல், உச்சி, ஈரம், இயற்கை
(b). ஈரம், இயற்கை, ஊடல், உச்சி
(c). உச்சி, ஊடல், இயற்கை, ஈரம்
(d). இயற்கை, ஈரம், உச்சி, ஊடல்

61. 'ஆடினன் பாடினன் ஆண்டும் ஈண்டும் பாய்ந்தோடினன் உலாவினன் உவகைத்தேன் உண்டான்' - அடி எதுகையைத்தேர்க.

(a). ஆடினன் - ஆண்டும்
(b). ஆடினன் - ஈண்டும் பாய்ந்தோடினன்
(c). ஆடினன் - உண்டான்
(d). ஆடினன் - தோடினன்

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.
Cell No : 98651 30130

62. கீழ்க்காணும் பாடலில் உள்ள அடி எதுகையைச் சுட்டுக.

'இன்னரும் பொழில்களும் இணையிலா வளங்களும் உன்னத மலைகளும் ஒளிர்தரு நாடு'

(a). இன்னரும் - உன்னத
(b). பொழில்களும் - வளங்களும்
(c). மலைகளும் - வளங்களும்
(d). இன்னரும் - இணையில்லா

63. பின்வரும் தொடரில் அமைந்துள்ள இயைபுத்தொடையைக் காண்க.

'புதர்களை நாம் அழிப்பதிலே மகிழ வேண்டும் புத்துலகை உருவாக்க முயல வேண்டும்'

(a). மகிழ - முயல (b). வேண்டும் - வேண்டும்
(c). புதர்களை - புத்துலகை
(d). அழிப்பதிலே - உருவாக்க

64. பின்வரும் தொடரில் அமைந்துள்ள எதுகையைக் காண்க.

'குன்றம் ஏந்தி குளிர்மழை காத்தவன் அன்று ஞாலம் அளந்த பிரான்பரன் '

(a). குன்றம் - குளிர்மழை
(b). குன்றம் - அன்று
(c). காத்தவன் - அளந்த
(d). ஞாலம் - அளந்த

65. 'பேயென்றா என்னை பிறர்நரியென் றார் தோழி நாயென்றாள் நீ யென்றேன் நான்' - அடி எதுகையைத் தேர்க.

(a). பேயென்றாள் - நரியென்றாள்
(b). பேயென்றாள் - நாயென்றாள்
(c). நரியென்றார் - நாயென்றாள்
(d). நரியென்றார் - நாயென்றாள்

66. 'இயற்கை இன்பக்கலம்' என்னும் பெருமைக்குரிய நூல்

(a). கலித்தொகை (b). அகநானூறு
(c). புறநானூறு (d). குறுந்தொகை

67. இரட்டைக்காப்பியங்கள் என அழைக்கப்படுபவை

(a). வளையாபதி, குண்டலகேசி
(b). சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம்
(c). வளையாபதி, மணிமேகலை
(d). சிலப்பதிகாரம், மணிமேகலை

68. 'கல்வியில் பெரியவர்' என அழைக்கப்பட்டவர்

(a). அப்பர் (b). சுந்தரர்
(c). குமரகுருபரர் (d). கம்பர்

69. 'சொல்லின் செல்வர்' என்னும் சிறப்பு பெயருக்கு உரியவர்

(a). நெ.து.சுந்தரவடிவேலு
(b). ரா.பி.சேதுப்பிள்ளை
(c). மு.வரதராசனார்
(d). வா.செ.குழந்தைசாமி

70. 'கற்றறிந்ததார் ஏத்தும் நூல்' யாது?

(a). புறநானூறு (b). கலித்தொகை
(c). அகநானூறு (d).குறுந்தொகை

71. 'மலர் நீட்டம் ' - என்பதன் இலக்கணக்குறிப்பு தேர்க.

(a). பொருளாகுபெயர் (b).. சினையாகுபெயர்
(c). கருவியாகுபெயர் (d). ஆகுபெயர்

72. 'வெங்கதிர்' - என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க.

(a). உருவகம் (b). உவமைத்தொகை
(c). வேற்றுமைத்தொகை(d).பண்புத்தொகை

73. 'கண் மலர்' - என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க.

(a). வினைத்தொகை (b). பெயரெச்சம்
(c). அளபெடை (d). உருவகம்

74. 'தருபவர்' - என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க.

(a). பெயர்ச்சொல் (b). வினையாலணையும் பெயர்
(c). தொழிற்பெயர் (d). பெயரெச்சம்

75. 'வைவாள்' - என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க.

(a). உரிச்சொற்றொடர் (b). வினைச்சொல்
(c). வினையெச்சம் (d). பெயரெச்சம்

76. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு

'எதற்கும் அஞ்சாமல் ஏறுபோல் நடக்க வேண்டும்'.

(a). என்ன செய்ய வேண்டும்?
(b). எதற்கு நடக்க வேண்டும்?
(c). ஏன் நடக்க வேண்டும்?
(d). எப்படி நடக்க வேண்டும்?

77. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு

'நல்லவர் நட்பு பிறை போல் வளரும் என்கிறார் திருவள்ளுவர்'.

(a). பிறை போன்றது எது? (b). எது நட்பு?
(c). எது வளரும்? (d). நல்லவர் நட்பு குறித்து திருவள்ளுவர் கூறுவது யாது?

78. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு

'தேனிலே ஊறிய செந்தமிழின் - சுவை தேறும் சிலப்பதிகாரம்'.

(a). தேனிலே ஊறியது எது?
(b). செந்தமிழின் சிறப்பு என்ன?
(c). சிலப்பதிகாரத்தின் சிறப்பு யாது?
(d). சிலப்பதிகாரம் எதன் சுவை போன்றது?

79. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு .

'சமணர் போற்றும் தெய்வம் அருகன்'.

(a). சமணர் என்பவர் யார்?
(b). சமணர் எங்கு வாழ்ந்தனர்?
(c). சமணர் போற்றும் தெய்வம் யார்?
(d). சமணருடைய கொள்கை யாது?

80. விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு

'தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று'.

(a). புகழின் சிறப்பு யாது?
(b). யார் தோன்றாமை நன்று?
(c). இசைபட வாழ்தல் என்பது யாது?
(d). புகழ் இல்லாதவரது தாழ்வினைக் கூறுக?

81. 'பிள'-என்னும் வேர்ச்சொல்லின் வினையெச்சத்தை தேர்ந்தெடுக்க.

(a). பிளந்த (b). பிளத்தல்
(c). பிளந்தார் (d). பிளந்து

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.
Cell No : 98651 30130

82. 'பார்'- என்னும் வேர்ச்சொல்லின் வினையெச்சத்தை தேர்ந்தெடுக்க.

(a). பார்த்தான் (b). பார்த்து
(c). பார்த்த (d). பார்த்தவர்

83. 'எழு'- என்னும் வேர்ச்சொல்லின் வினையெச்சத்தை தேர்ந்தெடுக்க.

(a). எழுந்த (b). எழுந்து
(c). எழுந்தான் (d). எழுதல்

84. 'கெடு'- என்னும் வேர்ச்சொல்லின் வினையெச்சத்தை தேர்ந்தெடுக்க.

(a). கெடுக்கும் (b). கெடுதல்
(c). கெடுத்து (d). கெடுகின்ற

85. 'செல்'- என்னும் வேர்ச்சொல்லின் வினையெச்சத்தை தேர்ந்தெடுக்க.

(a). சென்று (b). செல்லும்
(c). சென்ற (d). செல்லல்

86. அகர வரிசைப்படி சொற்களை சீர்செய்க.

(a). சித்தர், சூரியன், சீர்வரிசை, சேவடி
(b). சேவடி, சூரியன், சித்தர், சீர்வரிசை
(c). சித்தர், சீர்வரிசை, சூரியன், சேவடி
(d). சீர்வரிசை, சேவடி, சூரியன், சித்தர்

87. அகர வரிசைப்படி சொற்களை சீர்செய்க.

(a). துள்ளு, துதிக்கை, செப்பம், கோலம்
(b). கோலம், செப்பம், துதிக்கை, துள்ளு
(c). செப்பம், கோலம், துள்ளு, துதிக்கை
(d). துதிக்கை, துள்ளு, கோலம், செப்பம்.

88. அகர வரிசைப்படி சொற்களை சீர்செய்க.

(a). அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு
(b). மடம், அச்சம், பயிர்ப்பு, நாணம்
(c). நாணம், அச்சம், மடம், பயிர்ப்பு
(d). அச்சம், நாணம், பயிர்ப்பு, மடம்

89. அகர வரிசைப்படி சொற்களை சீர்செய்க.

(a). தன்மை, முன்னிலை, குறிப்பு, வெளிப்பாடு
(b). குறிப்பு, வெளிப்பாடு, தன்மை, முன்னிலை
(c). வெளிப்பாடு, குறிப்பு, தன்மை, முன்னிலை
(d). குறிப்பு, தன்மை, முன்னிலை, வெளிப்பாடு

90. அகர வரிசைப்படி சொற்களை சீர்செய்க.

(a). வேடன், வேட்டி, வேளிர், வேனில்
(b). வேட்டி, வேடன், வேனில், வேளிர்
(c). வேளிர், வேனில், வேடன், வேட்டி
(d). வேனில், வேளிர், வேட்டி, வேடன்

91. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(a). இரகுநாத சேதுபதி (b). அனந்த கவிராயர்
(c). சர்க்கரைப் புலவர் (d). சவ்வாதுப் புலவர்

92. பொருந்தா ஒன்றைக் கண்டறிக.

(a). வைகறை (b). யாமம்
(c). ஏற்பாடு (d). கூதிர்

93. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(a). செயின் (b). செய்யிய
(c). செய்யியர் (d). செய்து

94. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(a). கருமை (b). இளமை
(c). செம்மை (d). பசுமை

95. பொருந்தாச் சொல்லைக் கண்டறிக.

(a). கோலாட்டம் (b). கும்மி
(c). கரகாட்டம் (d). காவடியாட்டம்

96. மரபுப்பிழைகள் அற்ற தொடரைக் குறிப்பிடுக.

(a). தென்னஞ்செடி (b). தென்னம்பிள்ளை
(c). தென்னங்கொடி (d). தென்னங்கன்று

97. சந்திப்பிழைகள் இல்லாத தொடரைத் தேர்க.

(a). தூய தமிழ்ப் பற்று உண்மைத் தமிழ்ப் புலவர் உள்ளங்களிலிருந்து மறைந்து விடவில்லை

(b). தூய தமிழ் பற்று உண்மை தமிழ்ப் புலவர் உள்ளங்களிலிருந்து மறைந்து விடவில்லை

(c). தூய தமிழ்ப் பற்று உண்மைத் தமிழ் புலவர் உள்ளங்களிலிருந்து மறைந்து விடவில்லை

(d). தூய தமிழ்ப் பற்று உண்மைத் தமிழ்ப் புலவர் உள்ளங்களிலிருந்து மறைந்து விடவில்லை

98. வழூஉ சொற்களற்ற வர்க்கியத்தை தேர்வு செய்க.

(a). எங்கள் வீட்டு தாவாரம் நீளமாக உள்ளது
(b). எங்கள் வீட்டு தாவரம் நீளமாக உள்ளது
(c). எங்கள் வீட்டுத் தாழ்வாரம் நீளமாக உள்ளது
(d). எங்கள் வீட்டுத் தாள்வாரம் நீளமாக உள்ளது

99. பிறமொழிச்சொற்களற்ற வாக்கியத்தை தேர்வு செய்க.

(a). தீபாவளித் திருநாள் சர்க்கார் விடுமுறை நாளாகும்
(b). தீபாவளித் திருநாள் அரசு விடுமுறை நாளாகும்.
(c). தீபாவளித் திருநாள் ராஜிய விடுமுறை நாளாகும்
(d). தீபாவளித் திருநாள் கவர்மென்ட் விடுமுறை நாளாகும்.

100. ஒருமைப்பன்மைப் பிழைகளை நீக்குக.

(a). ஒளி, ஒலி என்ற சொற்களுக்கிடையில் ஒற்றுமை இருக்கின்றது.

(b). ஒளி, ஒலி என்ற சொற்களுக்கிடையில் ஒற்றுமை இருக்கின்றன.

(c). ஒளி, ஒலி என்ற சொற்களுக்கிடையில் ஒற்றுமைகள் இருக்கின்றனர்.

(d). ஒளி, ஒலி என்ற சொற்களுக்கிடையில் ஒற்றுமைகள் இருக்கின்றது.

## வினா விடைகள்

1 - c, 2- c, 3 – d, 4 – d, 5 – d, 6 - d, 7 – a, 8 – d, 9 – d, 10 - c, 11 - d, 12 -c, 13- c, 14 – c, 15 - c, 16 – c, 17 – c,
18 – c, 19 – c, 20 –d, 21 – b, 22 – a, 23 – a, 24 – b, 25 – c, 26 – c, 27 –c, 28 – c, 29 – d, 30 – d, 31 – a, 32 – c, 33 – c, 34 –c,
35 –c, 36 – c, 37 –c, 38 –c, 39 – c, 40 – c, 41 –c, 42 –a, 43 –c, 44 –b, 45 –a, 46 –b, 47 –d, 48 –c, 49 –b, 50 –c, 51 - c,
52- a, 53 – a, 54 – c, 55 –b, 56 - a, 57 – b, 58 – d, 59 – c, 60 - d, 61 - d, 62 - a, 63 - b, 64 – b, 65 – b, 66 – a, 67 – d, 68 – d,
69 – b, 70 –b, 71 - b, 72 - d, 73 – d, 74 – b, 75 – a, 76 – d, 77 – d, 78 – d, 79 –c, 80 - b, 81- d, 82-b, 83- b, 84-c, 85-a,
86 - c, 87 - b, 88 - d, 89-d, 90-b, 91-a, 92-d, 93-d, 94-b, 95-b, 96-b, 97- a, 98-c, 99- b, 100-a.

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

| | | |
|---|---|---|
| 1 | GK 17,000 வினா விடைகள் | 300 |
| 2 | GK1000 வினா-விடைகள் | 29 |
| 3 | இயர் புக் 2012 | 100 |
| 4 | இயர் புக் 2013 | 150 |
| 5 | தமிழக வரலாறு,இந்திய வரலாறு | 180 |
| 6 | புவியியல் 3000 வினா-விடைகள் | 110 |
| 7 | இந்திய தேசிய இயக்கம்,இந்திய அரசியலமைப்பு,இந்திய பொருளாதாரம் | 160 |
| 8 | பொதுத்தமிழ் | 120 |
| 9 | பொது அறிவு | 130 |
| 10 | CURRENT AFFAIRS ENGLISH MEDIUM | 65 |
| 11 | GK சக்சஸ் மாத இதழ் | 30 |
| 12 | தமிழ் அறிஞர்களும்,தமிழ்த்தொண்டும் | 200 |
| 13 | நடப்பு நிகழ்வுகள் 2013 சனவரி முதல் ஆகஸ்ட் வரை | 100 |

## ஆசிரியர் தகுதித்தேர்வு

| வ.எண் | புத்தகம் பெயர் | விலை |
|---|---|---|
| 1 | 6 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ் வினா-விடைகள் | 160 |
| 2 | TET முதல் தாள் (1056)பக்கம் | 400 |
| 3 | TET தமிழ்,ஆங்கிலம்,குழந்தை மேம்பாடு மற்றும் கற்பித்தல் முறைகள் | 180 |
| 4 | TET- கணிதம் | 150 |
| 5 | TET-அறிவியல் | 130 |
| 6 | TET-வரலாறு | 110 |
| 7 | TET-குடிமையியல்,புவியியல்,பொருளாதாரம் | 160 |
| 8 | TET- SELF TEST PAPER மாதிரி தேர்வு | 130 |

| வ.எண் | புத்தகத்தின் பெயர் | விலை |
|---|---|---|
| 1 | தமிழ்க்களஞ்சியம் 10,000 வினா-விடைகள் | 300 |
| 2 | கல்வியியல் 4,500 வினா-விடைகள் | 150 |
| 3 | TRB இயற்பியல் 2200 வினா-விடைகள் | 150 |
| 4 | TRB ஆங்கிலம் 4500 | 130 |
| 5 | TRB தமிழக வரலாறு,இந்திய வரலாறு 6100 வினா-விடைகள் | 180 |

| வ.எண் | புத்தகத்தின் பெயர் | விலை |
|---|---|---|
| 1 | +2 கணிப்பொறியியல் | 60 |
| 2 | +2 வணிகவியல் | 48 |
| 3 | +கணக்குப்பதிவியல் | 48 |
| 4 | அலக்கண் கவிதை | 70 |
| 5 | நோக்கால்-கவிதை | 50 |
| 6 | அரவாணிப்பூக்கள் | 70 |

www.arivukadal.com

இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130

# புத்தகம் கிடைக்கும் இடங்கள்

| வ.எண் | கடையின் பெயர் | - தொலைபேசி. எண் |
|---|---|---|
| 1. | சென்னை | 9094826254 |
| 2. | மதுரை | 9750216789 |
| 3. | கோவை | 9994343334 |
| 4. | சேலம் | 9842428861 |
| 5. | தூத்துக்குடி | 9443833333 |
| 6. | திருநெல்வேலி | 9750216789 |
| 7. | கன்னியாகுமரி | 9894846425 |
| 8. | திருவண்ணாமலை | 9994063702 |
| 9. | நாமக்கல் | 9894217248 |
| 10. | திருச்சி | 9944144222 |
| 11. | பெரம்பலூர் | 9894495845 |
| 12. | அரியலூர் | 9843427724 |
| 13. | புதுக்கோட்டை | 9659765900 |
| 14. | சிவகங்கை | 9994079013 |
| 15. | இராமநாதபுரம் | 9842537005 |
| 16. | தேனி | 9443929273 |
| 17. | ஈரோடு | 9443182330 |
| 18. | தர்மபுரி | 9025313661 |
| 19. | கிருஷ்ணகிரி | 9025313661 |
| 20. | விழுப்புரம் | 9943153202 |
| 21. | காஞ்சிபுரம் | 9842316661 |
| 22. | தஞ்சாவூர் | 9486525806 |
| 23. | நாகப்பட்டினம் | 9500478338 |
| 24. | வேலூர் | 9791544734 |
| 25. | திண்டுக்கல் | 9500862024 |
| 26. | விருதுநகர் | 9042482982 |
| 27. | திருவாரூர் | 9443491894 |
| 28. | திருத்தணி | 9750216789 |
| 29. | கரூர் | 9750216789 |
| 30. | கடலூர் | 9443079942 |

| நூலினை பெற வழி முறைகள் | |
|---|---|
| 1. | ARIVUKKADAL PATHIPPAKAGAM என்ற பெயரில் DD எடுத்து அல்லது M.O அனுப்பலாம் |
| 2. | கரூர் வைசியா வங்கியில் பணம் செலுத்தலாம்,<br>நடப்பு கணக்கு எண் : 1161135000002562<br>IFSC NO KVBL 0001161 / SOUTH MASI STREET, MADURAI |
| | முகவரி: அறிவுக்கடல் பதிப்பகம்,<br>மனை எண் 3262, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக்குடியிருப்பு,<br>வில்லாபுரம், மதுரை - 625011. |
| | Contact no: 9976935585, 98426 49140, 0452-6463666 |

www.arivukadal.com
இவை புத்தகமாக உள்ளது.

Cell No : 98651 30130